சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் தவறுதலாக அமிலத்தை அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்ட குழந்தை சி. வர்னேஷ்–இன் தாயார் திருமதி. சி. வளர்மதிக்கு சிறப்பு நேர்வாக கருதி வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக பணிநியமனம் வழங்க அனுமதித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–7(2) துறை

அரசாணை (நிலை) எண்.08 நாள். 09.02.2017

திருவள்ளுவராண்டு 2048

துன்முகி, தை 27

படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 06.07.2010.

2 அரசாணை (நிலை) எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 14.05.2012.

3 அரசாணை (நிலை) எண்.43, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந–7) த்துறை, நாள் 28.08.2014.

4 மதுரை மாவட்ட ஆட்சியரின் கடித ந.க. எண்.3657/அ1/2016, நாள் 10.01.2017

+++++

ஆணை :

பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நிரப்பப்படும் அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களை இன சுழற்சி அடிப்படையில் நியமனம் செய்வதற்குரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களை தேர்வு செய்வதற்கு உரித்தான கல்வித் தகுதி, வயது, தூரச் சுற்றளவு மற்றும் இதர வகையான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய காலிப்பணியிடங்களை நிரப்புவதற்குரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை 4–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை மாவட்ட ஆட்சியர் தனது கருத்துருவில் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள

வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் பயன்பெறும் 3 வயது குழந்தை சி.வர்னேஷ் 12.11.2016 அன்று அங்கன்வாடி மையத்திற்கு அங்கன்வாடி பணியாளர் (பொ) திருமதி. ஆர். கௌசல்யா என்பவர் கழிவறை சுத்தம் செய்வதற்காக குளிர்பான பாட்டிலில் கொண்டு வந்த ஆசிட்டை தவறுதலாக குடித்துவிட்டதால் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் 12.11.2016 முதல் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதை தொடர்ந்து பணியில் அலட்சியமாக இருந்த காரணத்தினாலும், குழந்தைக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியமைக்காக வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மைய பணியாளர் (பொ) திருமதி. ஆர். கௌசல்யா மற்றும் அங்கன்வாடி உதவியாளர் திருமதி. பி. மாரிலெட்சுமி ஆகிய இருவரையும் நிரந்தர பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டு, சம்பந்தப்பட்ட பணியாளர் மற்றும் உதவியாளருக்கு 22.12.2016 அன்றே சார்பு செய்யப்பட்டது எனவும், மதுரை மாவட்டம், பாலமேடு காவல் நிலையத்தில் திருமதி. ஆர். கௌசல்யா, அங்கன்வாடி பணியாளர் (பொ) மற்றும் திருமதி. பி. மாரிலெட்சுமி, அங்கன்வாடி உதவியாளர் மீது பிரிவுகள் 284 (ம) 336–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இச்சம்பவம் தொடர்பாக குழந்தை சி. வர்னேஷின் தாயார் திருமதி. சி. வளர்மதி என்பவர் வழக்கு தொடுத்துள்ளார் என்றும் அந்த வழக்கில் தனது குழந்தைக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு காரணமாக இருந்த அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் இழப்பீட்டு தொகை வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மைய குழந்தை சி. வர்னேஷின் குடும்ப சூழ்நிலையினை கருதியும், மேல்சிகிச்சை மேற்கொள்ளவும், குடும்ப பொருளாதார நிலை கருத்தில் கொண்டு இழப்பீட்டுத் தொகையாக ₹ 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம்) வழங்க பரிந்துரை செய்யப்பட்டது என்றும், குழந்தை சி. வர்னேஷின் தாயார் திருமதி. சி. வளர்மதி க/பெ ஏ. சின்னமுனியாண்டி, வெள்ளையம்பட்டி என்பவர் தனது குழந்தையை ஆறு மாத காலத்திற்கு கவனமாக பராமரிக்க வேண்டியுள்ளதால் தினசரி கூலி வேலைக்கு செல்ல இயலாது என்பதாலும் தனக்கு வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி பணியாளராக பணியிடம் வழங்கிட வேண்டி விண்ணப்பம் சமர்பித்துள்ளதாகவும், குழந்தை சி. வர்னேஷின் தாயார் சி. வளர்மதி அவர்கள் 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், தனியரின் வயது 35 எனவும், வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மைய குழந்தை சி. வர்னேஷின் குடும்ப சூழ்நிலையினை கருதியும், குடும்ப பொருளாதார நிலை கருதியும், குழந்தையின் தாயார் திருமதி. சி. வளர்மதி க/பெ ஏ. சின்னமுனியாண்டி, வெள்ளையம்பட்டி என்பவருக்கு வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி பணியாளராக பணியிடம் வழங்க பரிந்துரை செய்துள்ளார்.

6. மதுரை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு 12.11.2016 அன்று வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் தவறுதலாக அமிலத்தை அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்ட குழந்தை சி. வர்னேஷ்–ஐ ஆறு மாத காலத்திற்கு கவனமாக பராமரிக்க வேண்டியுள்ளதால் வெள்ளையம்பட்டியை சேர்ந்த குழந்தையின் தாயார் திருமதி. சி. வளர்மதி தினசரி கூலி வேலைக்கு செல்ல இயலாது என்பதாலும், குடும்ப பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டும், இதனை சிறப்பு நேர்வாக கருதி அவருக்கு வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி உதவியாளராக பணிநியமனம் வழங்க மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.

மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம்.
மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மதுரை மாவட்டம்.
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –600 009.

நகல்
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச்செயலாளர், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர்அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை– 600 009.
இருப்பிட கணக்கு அலுவலர், சென்னை –600 009.
(சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2) துறையின் வழியாக)
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
9/2/17